IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

		O.S. No.		75/2023
		P/W's	:	PW2
DEPOSITION OF WITNESS			:	
NAME	கழுவன்	CASTE	:	
S/O	தனிக்கொடி	RELIGION	:	இந்து
VILLAGE	அய்யப்பநாயக்கன்பட்டி	CALLING	:	
TALUK	வாடிப்பட்டி	AGE	:	65

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25.11.2025

முதல் விசாரணை

இவ்வழக்கில் வாதி தரப்பில் 2ம் சாட்சி ஆவேன். வாதிகளை எனக்குத்தெரியும். வழக்கின் அனைத்து விவரமும் எனக்குத் தெரியும். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது தான். எனது தரப்பில் நிரூபணம் செய்ய எனது ஆதார் அட்டையை தாக்கல் செய்கிறேன். (**சாட்சியின் ஆதார் அட்டை – அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல்– வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

குறுக்கு விசாரணை

1. நான் சாட்சியம் அளிக்குமாறு அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதி எனது உறவினர் இல்லை, அவர் எனக்கு பழக்கப்பட்டவர். வாதி வயக்காடு சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கில் என்ன பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது. வழக்குச்சொத்திற்கான பட்டா எண் மற்றும் சர்வே எண் எனக்கு ஞாபகமில்லை. நான் வாதியின் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/– M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி